www.Padasalai.Net www.TrbTnpsc.com

12th - பொருளியல்

பாடம் – 5 மற்றும் 6

2 மதிப்பெண் வினாக்கள். J.Kesaven. PG Asst. In Economics

1. பணத்தின் இலக்கணம்.

   பணம் எதைச்செய்கிறதோ அது தான் பணம் – வாக்கர்.

   (அல்லது)

   பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக் கருவி – கிரௌதர்.

2. பண்டமாற்றுமுறை.

   பண்டங்களைக் கொடுத்து பண்டங்களை வாங்குவது.

3. நெகிழிப்பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.
   - இது காகித பணத்திற்கு மாற்றாக உள்ளது.
   - நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருக்கும்
   - எ.கா: கடன் அட்டை (Credit card), பற்று அட்டை (Debit / ATM card)

4. பணவீக்கம் என்பதன் இலக்கணம்.

   பொருட்களின் விலைமட்ட அதிகரிப்பு.

   ”குறைந்த அளவு பண்டங்களை அதிக அளவு பணம் துரத்தும் நிலை” – கோல்பர்ன்.

5. தேக்கவீக்கம்.

   பொருளாதார வளர்ச்சியில் தேக்கநிலை, வேலையின்மை, அதிக அளவிலான் பணவீக்கம் ஆகியவை ஒன்றினைந்த சூழ்நிலை.

6. வணிக வங்கிகள் வரையறு.

   வங்கியாளர்களின் பணியாவது பரிவர்த்தனை மூலம் பணத்தைப் பெற்றும் அதனை கடனாகவும் கொடுப்பதாகும் – கிரௌத்தர்.

7. கடன் உருவாக்கம்.
   - கடன்களையும், முன் பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல்.

     (அல்லது)
   - மொத்த பணஅளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது.

8. மையவங்கி வரையறு.
   - இது வங்கிகளின் வங்கி ஆகும்.

- நாட்டின் பண அளிப்பினைக் கட்டுப்படுத்தும் ஓர் அமைப்பு.

9. வெளி அங்காடி நடவடிக்கைகள்.

மைய வங்கி பொதுச்சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் திரும்பப் பெறுவதும் வெளி அங்காடி நடவடிக்கைகளாகும்.

3 மதிப்பெண் வினாக்கள்:

1 **. உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக .**

நவீன பண முறையில் முதன்மையானது உலோகப் பணத்திட்டம் ஆகும். உலோகத் திட்டத்தில் தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகம் பணமாக பயன்படுத்தப்ப ட்டது.

அந்நாணயங்களில் முக மதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன.

**2 . பண அளிப்பு என்றா ல் என்ன ?**

ஒரு பொ ருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளவே பணஅளிப்பு ஆகும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பாகும்.

இந்திய ரிசர்வ் வங்கி பண அளிப்பில் M1, M2, M3 மற்றும் M4 என நான்கு வகையிலான அளவீடுகளை செய்கின்றது:

**3 . பண அளிப்பினை தீர்மா னிக்கும் காரணிகள் யாவை ?**

1. ரொக்க வைப்பு விகிதம் 2. ரொக்க இருப்பு வைப்பு விகிதம்.
3. ரொக்க இருப்பு விகிதம் 4. சட்டபூர்வ நீர்மை விகிதம்

4 **. தேவை -இழுப்பு மற்றும் செலவு உந்து பணவீக்கத்தினை விளக்குக.**

**தேவை -இழுப்பு பணவீக்கம் .**

பண்டங்களுக்கான் தேவை அதிகரிக்கும் போது விலை அதிகரிக்கிறது. இது தேவை இழுப்பு பணவீக்கம் எனப்படும்

**செலவு உந்து பணவீக்கம் .**

உற்பத்திச் செலவு அதிகரிக்கும் போது பண்டங்களுக்கான் விலை அதிகரிக்கிறது. இது செலவு உந்து பணவீக்கம் எனப்படும்

5. மீள்பணவீக்கம்.

வேலை வாய்ப்பினை பாதிக்காதவகையில் கடன்களை கட்டுப் படுத்துவதன் மூலம் பணவீக்கத்தை குறைப்பதாகும்

“வேலைவாய்ப் பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தை திருப்பும் செயல் முறையே மீள்பணவீக்கம் ஆகும்”

**6 . வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றி சிறு குறிப்பு தருக**

1. இது ஒரு நிதி நிறுவனம் ஆகும்.

2. அது முழு வங்கிககான உரிமம் கொண்டதும் அல்ல, மறறும் மைய வங்கியால் கண்காணிககப்படுவதும் இல்லை.

3. அவை கடன் பெற்று கடன் வழங்குகின்றது. அவை பண அங்காடியிலும் மூலதன அங்காடியிலும் செயல்படுகின்றன.

4. ஒரு வங்கியல்லா நிதி நிறுவனம் இரு வகைப்படும்: i. பங்குச் சந்தை மறறும் இதர நிதி நிறுவனங்கள் ii. நிதி நிறுவனங்கள், நிதி கழகங்கள், சீட்டு நிறுவனங்கள், யூனிட் டிரஸ்ட மறறும் காப்பீட்டு நிறுவனங்கள்.

**7 . கடன் கட்டுப்பாட்டு முறைகளைக்கூறுக.**

| கடன் கட்டுப்பாட்டு முறைகள் | |
|---|---|
| கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் | **கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்** |
| **1. வங்கி விகிதக் கொள்கை**<br><br>**2. வெளிச்சந்தைநடவடிக்கைகள்**<br><br>**3. மாறும் குறைந்தபட்சவங்கி ரொக்கஇருப்பு விகிதம்** | 1. கடன் பங்கீடு<br>2. நேரடி நடவடிக்கைகள்<br>3. நெறி முறை தூண்டல்<br>4. விளம்பரப்படுத்துதல்<br>5. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல்<br>6. விளிம்பு நிலை தேவைத் தொகையை மாற்றுதல் |

**8 . நபார்டின் பணிகள் யாவை?**

1. நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர் ச்சியை மேம்படுத்தும் வகை யில் அனைத்து வகையான உற்பத்தி மற்றும் முதலீட்டுக்காக மறுகடனை வழங்குகிறது.

2. மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது

3. மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.

4. நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள் மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியினை செய்கிறது.

**9. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களை குறிப்பிடுக.**

1. கருப்புப் பணத்தினை ஒழிப்பது,
2. இலஞ்சத்தை தடுப்ப து
3. தீவிரவாதித்திற்கு பணம் செல்வதை தடுப்ப து மற்றும்
4. கள்ளப் பணத்தினை தடுப்பது ஆகியன

5 மதிப்பெண் வினாக்கள்

1. பணத்தின் பணிகள்.

**I. முதன்மைப் பணிகள்.**

1. பணம் ஒரு பரிவர்த்தனை கருவி.

நவீன பரிவர்த்தனைகளில் பணம் ஒரு இடையீட்டு கருவியாக செயல்பட்டு வருகிறது.

2. பணம் ஒரு மதிப்பின் அளவுகோல்.

. ஒரு பண்டத்தை வாங்கும் பொழுது அதன் விலையை பணமாகக் கொடுக்கிறோம். ஆகவே பண்டத்தின் மதிப்பு பணத்தால் அளவிடப்படுகிறது.

**II. இரண்டாம் நிலைப் பணிகள்**

1. பணம் ஒரு மதிப்பின் நிலைக்கலன்.

சொத்துக்களை சேமித்து வைக்க விரும்புபவனுக்கு பணம் எளிய வசதியான கருவி ஆகும்.

2. பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை :

எதிர்கால செலுத்துகைக்கு பணம் ஒரு கருவியாக பயன்படுகிறது.

3. பணம் வாங்குதிறனை மாற்றிக் கொள்ளும்.

எல்லை கடந்தும் பரிவர்த்தனைகள் நடைபெறகிறது. இதனால், ஓரிடத்திலிருக்கும் வாங்குதிறன் மாற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**III துணைப் பணிகள்**

i. கடன்முறைக்கு அடிப்படையாக பணம் அமைந்துள்ளது.
ii தேசிய வருவாயை எளிதாக பகிர்ந்தளிக்க உதவுகிறது. ( வாரம், கூலி, வட்டி மற்றும் இலாபம் ).
iii. இறுதிநிலைப் பயன் பாடுகளை ஒப்பிடவும், இறுதிநிலை உற்பத்தி திறன்களை ஒப்பிடவும் பணம் பயன்படுகிறது:
iv. பணம் மூலதனத்தின் உற்ப த்தி திறனை உயர்த்துகிறது.

**IV. இதரபணிகள்.**

i திரும்ப ச் செலுத்தும் திறனை தக்கவைக்க பணம் உதவுகிறது.
ii. பணம் பொதுமைப் படுத்தப்பட்ட வாங்கு திறனை குறிக்கிறது.
iii. பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையை தருகிறது

2. மைய வங்கியின் பணிகள்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

*1. பண அதிகார அமைப்பு.*

இது நாட்டின் பண அளிப்பைக் கட்டுப்படுத்தி பணவீக்கத்தை குறைக்கிறது மற்றும் வங்கி அமைப்பை நிலைப்படுத்துகிறது.

*2. காகிதப் பண வெளியீடு.*

இது காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனமாகும். மேலும் பணம் மற்றும் கடன் அளவுகளை மேலான்மை செய்கிறது.

*3. வங்கி உரிமங்கள் வழங்குகிறது.*

வணிக வங்கிகள் வங்கித் தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும்.

*4. அரசின் வங்கி.*

இது மத்திய, மாநில அரசுகளுக்கான வங்கியாகும். அரசின் நிதி தொடர்பான அனைத்துப் பணிகளையும் செய்கிறது.

*5. வங்ககளின் வங்கி*

மைய வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கி ஆகும். வங்கிகளுக்கு கடன் வழங்குகிறது. மேலும் அவைகளின் வைப்புகளையு ஏற்கிறது.

*6. கடன் வழங்குவதில் கடைசி புகழிடம்*

வணிக வங்கிகளுக்கு தீர்க்க முடியாத நிதிச்சிக்கல்கள் ஏற்படும் பொழுது, மைய வங்கி ஈட்டுக் கடனை வழங்கி உதவுகிறது.

*7. அந்நிய செலாவணி பாதுகாவலன்*

மைய வங்கி வெளிநாட்டு பண இருப்புக்களை பாதுகாக்கும் பணியினை செய்கிறது. மேலும் சட்டப்படியான மேலாண்மையும் செய்கின்றது.

*8. பொருளாதாரத்தி நெறிப்படுத்துகிறது.*

பணவியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நாட்டு வருமானம், செலவு, வேலைவாய்ப்பு, முதலீடு, சேமிப்பு ஆகியவற்றை தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.